வைகளை மட்டும் வைத்து, பிறகு தீர்ப்பு அளிக்கிறேன். நாளைக்கு அமைச்சரவர்கள் பதில் அளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரவர்கள் பதில் அளித்துக் கொண்டிருந்த பொழுது சில உறுப்பினர்கள் பத்திரிகைகளில் விளம்பரம் பெறு வதற்காகவே தேவை இல்லாத விஷயங்களைச் சொல்லி விளம் பரம் தேடுகிறார்கள் என்று யாரையும் குறிப்பிடாமல் சொல்வது அவ்வளவு நல்லது அல்ல. ஆகவே, அதைச் சபைக் குறிப்பி லிருந்து நீக்கலாமா என்று கேட்க விரும்புகிறேன். சில உறுப் பினர்கள் என்று சொல்லாமல், யாரையாவது குறிப்பிட்டு அமைச்சரவர்கள் சொல்லலாம். சில உறுப்பினர்கள் பத்திரிகை களிலே விளம்பரங்கள் தேடுவதற்காகத் தேவையில்லாத விஷயங் களைச் சொல்லி என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படிச் சொன்னால் என்ன தவறு? அதை ஏன் தவறான பொருளில் எடுத்துக் கொள்ள வேண்டும்? ஒவ்வொரு உறுப்பினரும், தொகுதிக்காக மட்டு மல்ல. தமிழகம் முழுவதற்குமாகப் பாடுபடுகிறோம் என்ற அளவில் விளம்பரம் தேடுவதில் தவறு இல்லை.

திரு. எம். ஏ. லத்தீப்: மக்கள் தெரிந்து கொள்ள வேண்டு மென்று சொல்வது ஒன்று. விளம்பரத்திற்காகவே கொண்டு வருவது ஒன்று. அமைச்சரவர்கள் அந்த வகையிலே சொல்லி யிருப்பார்களேயானால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: லத்தீப் அவர்களே, அதில் தப்பு ஒன்றுமில்லை.

(4) தகவல்கள் கோரல் (தொடர்ச்சி)

(ஆ) முன்னாள் கல்வி அமைச்சர் திரு நெடுஞ்செழியன் மீது எழுப்பப்பட்ட பிரச்சினை குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, தாங்கள் மிகச் சிரமப்பட்டு உரிமைப் பிரச்னைகளின் மீது இங்கே தீர்ப்பு அளித் திருக்கிறீர்கள். ஏற்கனவே முன்னாள் கல்வியமைச்சர் நெடுஞ் செழியன் அவர்கள் மீது உரிமைப் பிரச்னை எழுப்பப்பட்டு, விவாதிக்கப்பட்டு, அதற்குத் தீர்ப்பு அளிப்பதாகவும் கூறி யிருக்கிறீர்கள். இது வரையிலும் அந்தத் தீர்ப்பு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே எதிர்க்கட்சித் தலைவரவர்கள் என்னிடத்தில் கேட்டார்கள். நாவலர் அவர்களிடமிருந்து பதில் வந்து விட்டது.

திரு. மு. கருணாநிதி; நான் கேட்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, ஜேம்ஸ் அவர்கள் தந்திருக்கிறார்கள். பத்திரிகையின்மீதும் தந்திருப்பதால் பத்திரிகையிடம் விளக்கம் கேட்டு அனுப்பப்பட்டிருக்கிறது, தகுந்த பதில் இன்னும் வரவில்லை. வந்ததும் கட்டாயம் எடுத்துக் கொள்ளப்படும்.

[முற்பகல் 10-40]

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24-3-1979 அன்று நான் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் மீது பேரவையின் 184-வது விதியின் கீழ் ஒரு உரிமை மீறல் பிரச்னை கொடுத்திருக்கிறேன். அதை நான் படிக்கட்டுமா? அல்லது உங்களுடைய கருத்தைச் சொல்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன். அடுத்து, ஒத்தி வைப்புத் தீர்மானம்......

திரு. எம். ஏ. லத்தீப்: வேறு பிரச்னைப் பற்றி நான் கொடுத்திருக்கிறேன்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து தாங்கள் என்னுடைய அறைக்கு வந்து கேட்பீர்களானால் நான் பதில் சொல்கிறேன்.

(5) ஒத்திவைப்புத் தீர்மானம்.

என். ஜி. ஓ-வினரின் உண்ணாவிரதம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழகம் முழுவதும் அரசிதழ் பதிவில்லா அரசு ஊழியர்கள் காலவரையற்ற உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு திரு. ஜே. ஜேம்ஸ், திரு. மு. அம்பிகாபதி, திரு. எஸ். சிவசாமி, திரு. கூத்தக்குடி எஸ். சண்முகம், திரு. சேலம் மு. ஆறுமுகம், திரு. சி. கோவிந்தராசன், திரு. ஏ. ஆர். மாரிமுத்து ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர்.

திரு. சி. ஆறுமுகம்: நாங்களும் கொடுத்திருக்கிறோம். நாங்கள்தான் முதலில் கொடுத்தோம்.

திரு. கெ. சொக்கலிங்கம்: நான், 19-ந் தேதியே கொடுத்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலிலே கொடுத்தது மறுக்கப்பட்டது.